[1972 மார்ச் 28

இப்போது பல ஆண்டுகள் இடைவெளி கடந்த பிறகு பல தனிப்பட்டவர்கள் அந்த நிலங்களை அனுபவிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம். பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவர் அனுபவித்தாலே அவர்களுக்குச் சொந்தம் என்ற நிலையில், பல நூற்றாண்டுகள் கடந்துபோன பிறகு நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. இவற்றை எல்லாம் வரலாற்றுக் குறிப்புகள் என்ற அளவுக்குத் தான் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சுப்பிரமணியபுரத்துக்கு உதவிப் பதிவு அலுவலகம்

***750 வினா—திரு. சி. இராமநாதன்** : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அறந்தாங்கி வட்டாரத்தில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் சப்-ரிஜிஸ்தரார் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அறந்தாங்கி வட்டாரத்தில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் உதவிப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.

திரு. சி. இராமநாதன் : அது இந்த ஆண்டில் ஏற்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அது பற்றித்தான் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை முடிந்த பிறகு ஆவன செய்யப்படும்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: திண்டுக்கல் வட்டம், சின்னாளப் பட்டியில் பத்திரப் பதிவு அலுவலகம் இல்லை. அதனால் அந்தப் பகுதி மக்கள் திண்டுக்கல் அல்லது ஆத்தூருக்கு எட்டு மைல் தூரம் சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு பத்திரப் பதிவுக் காரியாலயம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நிதி வசதிக்கு ஏற்றபடி கனம் உறுப்பினரின் யோசனையை அரசு பரிசீலனை செய்து நிறைவேற்றும்.

1972 மார்ச் 28]

மீனளத் துறையிலுள்ள அரசிதழ் பதவிகள்.

*751 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1961-ம் ஆண்டுக்குப் பிறகு நாளது வரையில் மீன் துறையில் எவ்வளவு கெஜட் பதிவுள்ள பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

(இ) இந்த 10 ஆண்டுகளில் அதிகரித்துள்ள வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 41 பதவிகள்.

(இ) ரூபாய் 9 லட்சம் (ஏறத்தாழ).

சிறு தொழில்கள் நடத்த அரிசனங்களுக்குக் கடன்

*752 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்கள் சிறு தொழில் நடத்த வட்டியில்லாத கடன் வழங்கும்போது சொத்து ஜாமீன் தர கோரப்படுகிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அரிசனங்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகத்தான் இதுபோன்ற வட்டி இல்லாத கடன்கள் வழங்கப்படுகின்றன. பொருளுக்கே ஆதாரம் இல்லாத அவர்கள் எங்கிருந்து சொத்து ஜாமீன்களைக் கொடுக்கப் போகிறார்கள்? ஆகவே, நபர் ஜாமீனை வைத்து அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 999 ரூபாய்க்குள் கடன் பெறுவதாக இருந்தால் நபர் ஜாமீன்தான் கொடுக்கப்படுகிறது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருள்களை வாங்குவதாக இருந்தால் அந்தப் பொருள்களையே அடமானமாக வைத்து கடன் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேலும் கடன் வாங்குகிறவர்களுக்கு சொந்த வீட்டுக்காரர்கள் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. எதுவும் இல்லாத ஏழைகளுக்கு நபர் ஜாமீன் மீதுதான் இன்றைக்கே கடன் கொடுக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இப்படிக் கொடுக்கப்படுகின்ற கடன் எத்தனை தவணைகளில் திரும்பப் பெறப்படுகின்றது? அரசின் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற இந்தக் கடன்கள் வெகுவாகத் திரும்பி வருவதில்லை என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதைக் கிட்டத்தட்ட 100 மாதத் தவணைகளில் திருப்பிப் பெற வேண்டுமென்ற முறை இருக்கிறது. இந்தக் கடனைக் கொடுத்து இரண்டு ஆண்டுக் காலம் பொறுத்துத்தான் அந்தக் கடனை வசூலிக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கடன் வாங்கியவர்களிடமிருந்து இந்த ஆண்டு வசூலிக்கத் துவங்கியிருக்கிறார்கள். திருப்பிக் கட்டவில்லை என்ற புகார் இதுவரை இல்லை. இனி வரலாம், வராமலும் இருக்கலாம். பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அரிசனங்கள் தொழில் செய்து பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திட்டம் இது. இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலுக்காகக் கொடுக்கக்கூடிய தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அச்சகம் வைக்க ஐயாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள்; ஐயாயிரம் ரூபாயில் ஒன்றும் வாங்க முடியாது. மருந்து ஷாப் வைக்க, பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். சைக்கிள் ஷாப் கிராமங்களில் வைக்க 500 ரூபாயும், நகரத்தில் ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகைகளையெல்லாம் சற்று உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தத் தொகைகள் கிராமத்தில் எந்த அளவுக்கு முதலீடு செய்தால் அந்தத் தொழிலை நடத்த முடியும், பட்டணங்களில் எந்த அளவுக்கு முதலீடு செய்தால் அந்தத் தொழிலை நடத்த முடியும் என்று பார்த்து இருவேறு கூறுகளாகப் பிரித்து தரப்படுகிறது. அந்த வகையில் சைக்கிள் கடை பட்டணத்தில் ஏற்படுத்துவதாக இருந்தால் 1,000 ரூபாய் தரப்படுகிறது. 250 ரூபாய் வீதம் மூன்று சைக்கிள்கள் வாங்கிக் கொண்டு மீதித் தொகைக்கு மற்ற சாமான்களை வாங்கிக் கொள்ளலாம். கிராமங்களில் வைப்பதாக இருந்தால் 500 ரூபாய் கொடுக்கிறோம். அவர்கள் இரண்டு சைக்கிள்கள் வாங்கிக் கொண்டால் போதும். அதை ஹயருக்குக் கொடுத்து அதன் மூலம் சம்பாதிக்க முடியும். லேத் பட்டறைக்கு 10,000 ரூபாய் கொடுக்கிறோம்;